2. இந்திய விண்வெளி வீரர்களுக்கு அவை வாழ்த்துத் தெரிவித்தல்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, விண்வெளி, வானியல் விஞ்ஞான வரலாற்றிலே பெருமைக்குரிய சாதனையாக இன்றைக்கு இந்தியா–சோவியத் கூட்டுறவு விண்வெளிப் பயணம் வெற்றிகரமாக நடந்து கொண்டிருக்கிறது. நம்முடைய பாரதத்தைச் சேர்ந்த விண்வெளி வீரர் ராகேஷ் சர்மா சல்யூட்-7–ன் மூலமாக இன்றைக்கு பல்வேறு அற்புதங்களை நிகழ்த்தி வருகிறார்கள். ஆகவே வளர்ந்து வருகிற விஞ்ஞான நாடுகளோடு பாரதமும் சேர்ந்திருக்கிற இந்த நல்ல நேரத்தில் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்கு நம்முடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவிக்கும் வகையில், சோவியத் நட்புறவிற்கு நம்முடைய பாராட்டுதல்களைத் தெரிவிக்கும் வகையில், இந்திய–சோவியத் விண்வெளி விஞ்ஞானிகளுக்கு நம்முடைய பாராட்டுதல்களைத் தெரிவிக்கும் வகையில் தாங்கள் வாழ்த்து கூறுவது, இந்த நாடு தழுவிய வெற்றியோடு, நாமும் அந்த வெற்றியை பகிர்ந்து கொள்கிறோம் என்ற அளவில் பொருத்தமாக அமையும். அந்த முறையில் தாங்கள் வாழ்த்துத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் முறையாக இந்திய வீரர் ஒருவர், ராகேஷ் சர்மா என்று சொல்லக்கூடிய வீரர், ரஷ்ய விண்வெளி வீரர்களோடு இணைந்து விண்வெளி பயணத்தை வெற்றிகரமாக நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் பல விஞ்ஞான சாதனைகளை அவர்கள் ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள், அந்த விண்வெளி வீரருக்கு இந்த அவை தன்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவிக்க வேண்டுமென்ற என்னுடைய கருத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு.என்.எஸ்.வி. சித்தன் அவர்களும், திரு. அழகர்சாமிஅவர்களும் சொன்ன கருத்துக்களை நான் ஏற்றுக் கொள்கிறேன். திரு ராகேஷ் சர்மா அவர்கள் Kajakhstan பகுதியிலிருந்து 14 மாடிக் கட்டிடம் உயரமுள்ள ஒரு பெரிய ராக்கெட்டின் மூலம் விண்வெளி பயணத்திற்கு புறப்பட்டுச் சென்று இன்றைக்கு ஒரு மகத்தான சாதனையைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். இரவு 10 மணிக்கு சென்னையைக் கடந்து செல்வார்கள் என்றும், சென்னையை அவர்கள் படம் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் செய்திகளை நேற்று மாலை பத்திரிக்கையில் போட்டு இருந்தார்கள். ஆகவே இன்றைக்கு நாம் வாழ்த்துத் தெரிவிப்பது நல்ல நேரம் என்று தான் நினைக்கிறேன். ஏனென்றால் நேற்றைக்குத் தான் அவர் நம்மையெல்லாம் பார்த்துவிட்டுப் போயிருக்கிறார்கள். மிகப் பெரிய சாதனையை இந்தியா இன்றைக்கு நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. இந்தியா இதுவரையிலும் வளர்ந்து வருகிற நாடு என்று தான் எடுத்துச் சொன்னார்கள். இந்த விஞ்ஞான வளர்ச்சியை ஒப்பிட்டுப்

பார்க்கிறபோது மற்ற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கத் தகுந்த வகையில் வளர்ந்து விட்ட நாடாகவே மாறிக் கொண்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

விஞ்ஞான அற்புதங்களை விளைவித்துக் கொண்டிருக்கிற சோவியத் நாடு இந்த விஞ்ஞான கருத்துக்களை மற்ற நாடுகளோடு பகிர்ந்து கொள்ள வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு நட்பு, நேசக்கரம் நீட்டி, நம்முடைய தோழர்களையும் அழைத்து தங்களுக்குத் தெரிந்த விஞ்ஞான உலகத்தை அவர்களுக்கும் தெரிவிக்கிற வகையில் பயிற்சி அளித்து திரு. ராகேஷ் சர்மா அவர்களைத் தேர்ந்தெடுத்ததற்காக அந்த நாட்டிற்கும் நம்முடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறோம். இப்படிப்பட்ட நட்புறவுகள் வளரவேண்டும். உலகத்தில் சமாதானம் தழைக்க இந்த நட்புறவு பயன்படும் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும். ஆகவே உலக சமாதானத்திற்கு எதிர்காலத்திற்கு வழிகாட்டியாக விளங்கும் இந்திய-சோவியத் நட்புறவு வளர்வதோடு மட்டுமல்லாமல், இப்படிப்பட்ட விஞ்ஞான வளர்ச்சி உலகத்தின் எந்தப் பகுதியில் ஏற்படுமானாலும் அதிலே மற்ற நாடுகள் பங்குகொள்வது எதிர்கால அமைதிக்கு வழிகோலும் என்பதை எடுத்துச் சொல்லி, திரு. ராகேஷ் சர்மா வெற்றிக்கு தமிழக சட்டமன்றத்தின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. வரவு—செலவுத் திட்டம் 1984-85 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண். 15 — காவல்துறை தொடர்ச்சி.

(ஆ) கோரிக்கை எண். 16 — தீயணைப்புப் பணிகள் ,,

(இ) கோரிக்கை எண். 2 — மாநில ஆயத் தீர்வைத் துறை. ,,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவாதத்திற்கு பதிலுரை அளிக்கவேண்டியிருப்பதால், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரத்திற்குள் தங்கள் உரைகளை முடித்துக் கொள்ளவேண்டும்.

* திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை தீயணைப்புத் துறை மற்றும் மாநில ஆயத்தீர்வைத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். காவல்துறை கொள்கை சம்பந்தமாக கூறும் போது, சமூக நலனை முன்நிறுத்தி, நாட்டு நலனுக்கு உழைப்பது காவல்துறையின் பணியாகும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்தப் பணியை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு காவல் துறையினிடத்திலே இருக்கிறது என்றாலும், தமிழகத்திலே அந்தப் பணியை நிறைவேற்றுவதற்கு காவல்துறையினர் எவ்வாறு செயல்படுகிறார்கள், எவ்வாறு செயல்படுத்தப்படுகிறார்கள் என்பதுதான் இன்றைய தினம் இருக்கும் பிரதான கேள்வியாக அமைந்து இருக்கிறது.